**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அ.வ.எண்.262/2023**

**(TNDG07-0000727-2023)**

திருமதி.சுதா --- வாதி

// எதிர் //

1.திருமதி.அங்காத்தாள்,
2.திரு.துரைச்சாமி,
3.திருமதி.வஞ்சாத்தாள் (இறப்பு)
4.திரு.ராமசாமி,
5.திரு.சுப்பிரமணியன்,
6.திரு.சுப்பிரமணி,
7.திருமதி.கவிதா,
8.திருமதி.சசிகலா. --- பிரதிவாதிகள்

(இ.ம.எண்.2/2024-ல் கடந்த 08.08.2024ஆம் தேதிய உத்தரவின்படி 6 முதல் 8 பிரதிவாதிகள் இறந்துபோன 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்)
(இ.ம.எண்.5/2024-ல் கடந்த 24.09.2024ம் தேதிய உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கானது கடந்த 13.09.2023ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் என் முன்பாக வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S.ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் ஒருதலைப்பட்சமாகக் கருதப்பட்டும், 4, 6, 7, 8 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், 5ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் K.பூபதி மற்றும் K.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி 5-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.8/2025

மனுவானது இன்று அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

வழக்குச் சொத்துக்களில் வாதிக்குரிய 1/18 பாகச் சொத்துக்களை பிரதிவாதிகள் நலந்திகுடு பார்த்து, கூட்டுச் சுவாதீனத்தில் இருந்து பிரித்து வாதிக்கு தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், தவறும்பட்சத்தில், நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்குச் சொத்துக்களை 18 சம பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு பாகத்தை வாதிக்கு வழங்குவதன் மூலம் இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், கடந்த 27.12.2000ஆம் நாள் பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட பாப்பிரிவினை பத்திரம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோாயும், வழக்குச் சொத்துக்களை பிரதிவாதிகள் வேறு நபர்களுக்கு கிரையம், ஒத்தி, ஈடு போன்ற பந்தக பராதீனங்களுக்கு உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கும்படி கோரியும், வழக்கு செலவு தொகையினை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.8/2025 மனுவானது இன்று அனுமதிக்கப்பட்டது. எனவே, இவ்வழக்கின் பிராது நிராகரிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 13.03.2026ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.13 18:32:11 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**